# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 16, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 29, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது''

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவர், அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 521 மற்றும் 522, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளிவைக்கப்படுகின்றன.

வினா எண் 523, திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

523—

தமிழ்மொழியிலுள்ள சித்த மருத்துவக் குறிப்புகளை ஆங்கில மொழியாக்கம் செய்தல்.

*11716—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்மொழியில் உள்ள சித்த மருத்துவக் குறிப்புகளை ஆங்கில மொழியாக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா ?

**(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன**

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்மொழியில் உள்ள சித்த மருத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய 1981 ஆம் ஆண்டு மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இதன்படி, ஆய்வு மருத்துவர், சுருக்கெழுத்து தட்டச்சர், அலுவலக உதவியாளர் ஆகியவர்கள் பதவிக்கு ஒருவராக ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளார்கள். 1991 ஆம் ஆண்டு தனி அலுவலர் நியமிக்கப்பட்டார். அதன் பின்பு ஆறு மொழி பெயர்ப்பாளர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு செய்தித்தாளில் விளம்பரம் கொடுக்கப்பட்டு, 40 பெயர்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்யப்பட்டு, இப்போது தேர்வு செய்வதற்காக தயாராக இருக்கிறது. இதன்படி மொழி பெயர்ப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இப்பணி முடிக்கப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இந்த சித்த மருத்துவத்தினுடைய முக்கியத்துவம் கருதி மொழி பெயர்ப்புக்காக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளை இங்கே தெளிவுற விளக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சித்த மருத்துவம் என்பது தமிழர்களுடைய அறிவுத் திறனை மருத்துவத் துறையில் ஆங்கில மருத்துவத்திற்கு முற்பட்ட வகையில் அவர்களுடைய அறிவு ஆற்றலை வளர்க்கக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது. இன்றைக்கு எய்ட்ஸ் என்ற கொடிய வியாதிக்கு ஆங்கில மருத்துவத்தில் கூட மருந்துகள் கண்டுபிடிக்காத நிலையில் சித்த மருத்துவத்தின் மூலம் அதை குணப்படுத்தலாம் என்று இங்கே வல்லுநர்கள் வெளிபடுத்துவது இந்த சித்த மருத்துவத்தினுடைய மேன்மையை உலகம் அறிய செய்வதாக உள்ளது. எனவே, இந்த மொழி பெயர்ப்பு நூலானது எவ்வளவு விரைவில் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொழி பெயர்ப்புக்குண்டான அத்தனை ஏற்பாடுகளையும் நாம் செய்திருக்கிறோம். எனவே, அந்தப் பணிகளை அவர்கள் துவக்கினால், அவர்கள் தான் சொல்ல வேண்டும் எத்தனை நாட்களிலே அதை முடித்துக் கொடுக்க முடியும் என்று. நாம் அதை அவர்களிடத்திலே தான் கேட்கவேண்டும். இப்போது 5 நூல்கள் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தேவையான ஆதார நூல்கள், அதேபோல துணை நூல்கள் அத்தனையையும் அதற்கு ஏற்பாடு செய்து இப்போது அவர்களிடத்தில் கொடுக்க நாம் இருக்கிறோம். எனவே, எவ்வளவு நாட்களுக்குள் இதையெல்லாம் மொழி பெயர்க்க முடியும் என்பதை அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசி தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதைத் தெரிந்த பின்னால் வெளியிடலாம். இன்றைக்கு மாலையில் சித்த மருத்துவர்களுடைய கூட்டத்தை நாம் வைத்து இருக்கிறோம். அது சம்பந்தமாக அத்தனை பேரையும் அதில் இருக்கின்ற சிறப்பான மருத்துவர்கள், அந்த சித்த மருத்துவம் பற்றி தெரிந்தவர்கள் இப்படி அத்தனை பேரையும் இன்றைக்கு அழைத்து மாலை 3 மணிக்கு பேசயிருக்கிறோம். அவர்கள் இதிலே என்ன என்ன முன்னேற்றம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களோ, எந்த எந்த புத்தகங்களை இதிலே மொழி பெயர்த்தால் வசதியாக இருக்கும் என்று சொல்கிறார்களோ அதையெல்லாம் இதிலே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நாம் கருதியிருக்கிறோம். எனவே, இதற்கு ஒரு காலக் கெடு நிர்ணயிப்பதை விட இது தொடர்பான அத்தனை புத்தகங்களையும், முக்கியமான புத்தகங்கள் அத்தனையையும் மொழி பெயர்ப்புச் செய்வது என்பது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொழி பெயர்ப்புக்காக ஒரு தனி அலுவலர் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அந்த தனி அலுவலர் சித்த மருத்துவ வல்லுநரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும் பழனியை எடுத்துக் கொண்டால் சங்க காலத்திலிருந்து பழனி பகுதி சித்த மருத்துவத்திற்குப் பெயர்பெற்ற பகுதியாக இருக்கிறது. சித்த மருத்துவ வல்லுநர்கள் அந்த பழனிப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அப்பேர்பட்ட அந்த வல்லுநர்களையும் அரசு இந்தப் பணிக்குப் பயன்படுத்திகொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதிலே ஒரு சித்த மருத்துவர் அங்கம் பெற்றிருக்கிறார். ஆனால், தனி அலுவலர் சித்த மருத்துவர் இல்லையென்றுதான் கருது கிறேன். அந்தக் குறிப்பு என்னிடத்திலே இப்போது இல்லை. ஆனால், தனி அலுவலர் சித்த மருத்து வராக இருக்க முடியாது என்றுதான் கருதுகிறேன். தேர்ச்சி பெற்ற சித்த மருத்துவர்களெல்லாம் பழனி யிலே இருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்தார்கள். இது, புத்தகத்தை மொழி பெயர்க்க வேண்டுமென்ற காரணத்தால், சித்த மருத்துவருடைய உதவி எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ, இந்த மொழிபெயர்ப்பாளர் களுக்கு எங்கே சந்தேகம் வருகிறதோ அப்போது அப்படிப்பட்டவர்களை அழைத்து, அந்தப் பிரச்சினை களில் விளக்கம் கேட்டுக் கொள்வதற்காக பயன் படுத்துமாறு கேட்டுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம், தமிழாக்கத் திலேயிருந்து ஆங்கில மொழிபெயர்ப்பு செய்வதால், தமிழகத்தைத் தவிர மற்ற இடங்களுக்கும் பயன் பெறும் என்ற அளவில் இது வரவேற்கக்கூடியது. அதேநேரத்தில், சித்த மருத்துவ தமிழ் வாசகங்கள் இன்றைய தலைமுறையினர் படித்து எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் இல்லை. தானே படித்து, தானே அந்த மருத்துவமுறையை கையாளும் வகையில், தமிழில் எளிய முறையில் அதனை அச்சிட முன் வருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறை யிலே பலபேர் இப்போது அந்த முயற்சியை எடுத்து எழுதியிருக்கிறார்கள். இப்போது, சித்த மருத்துவ கல்லூரிக்காகப் புத்தகங்கள் தயாரிக்க வேண்டும். புத்தகங்கள் எழுதப்படவேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாட்டையும் நாம் செய்திருக்கிறோம். எனவே, அந்தப் புத்தகங்களை எழுதுகிறபோது, இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும். கடந்த காலத்திலே எழுதப்பட்ட பொயடிக் (Poetick) லாங்வேஜிலே இருக்கிற அந்தப் புத்தகம் இப்போது நடைமுறை

1993 ஏப்ரல் 29]

யிலே நமக்கு எப்படித் தேவையோ, அதைப்போ அது வந்துவிடும் என்று கருதுகிறேன். அதற்கும் ஒரு தனிக் கவனத்தை எடுத்துக் கொள்ளும்படி துறைக்கு அறிவுறுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஆரோக்கியசாமி, இப்படி அடிக்கடி எழுந்து நிற்கக் கூடாது. திரு. வி. என். சுப்பிரமணியன்.

திரு. வி. என். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் என்று சொல்லுகின்றபோது, அது சித்தர்களுடைய மருத்துவமாகும். சித்தர்கள் அந்தக் காலத்திலே ஊர் ஊராகச் சென்று இலவசமாக மருத்துவம் பார்த்தார்கள், எந்த உதவியும் பெறாமல், பொது மருத்துவமாக ஏழையெளியவர்களுக்கு மருத்துவம் பார்த்தார்கள். அதன் காரணமாகத்தான் அதற்கு சித்த மருத்துவம் என்றே பெயர் ஏற்பட்டது. சித்தர்கள் பார்த்த மருத்துவம் என்ற காரணத்திற்காக. ஆகையால் எந்தெந்த சித்தர்களுடைய நூல்களிலேயிருந்து அந்த மருத்துவத் தொகுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாயிரம், மூன்றாயிரம் ஆண்டுகளாக இருக்கிற பிரச்சினைகளையெல்லாம் இப்போது அலசி ஆராய்ந்து பதில் சொல்வது கொஞ்சம் கடினமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரே ஒரு பெரிய சித்தராக இருந்தால்தான் இதற்குப் பதில் சொல்ல முடியும் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 புத்தகங்களை நாம் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அந்த 5 புத்தகங்களை மொழி பெயர்க்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. சித்தர்கள்தான் இதைச் செய்தார்கள் என்பதிலே நமக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. இந்தப் புத்தகத்தைப் பொறுத்த வரையில் பலபேர் இப்படி வைத்தியம் செய்து அதைப்பற்றி எழுதி வைக்காமலேயே போய்விட்ட காரணத்தால், பல நல்ல வைத்தியங்கள் நமக்கு இப்போது கிடைக்காமல் போய் இருக்கிறது. எனவே, என்ன கிடைத்திருக்கிறதோ அதை வைதது இப்போது மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்திய நூல்களை மொழி பெயர்க்கும்போது, சித்த வைத்தியம் தெரிந்த அந்த டாக்டர்களை மட்டும் அந்த மொழி பெயர்ப்பில் பயன்படுத்தப்போகின்றோமா அல்லது இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியிருப்பதால் ஆங்கில மொழி வல்லுநர்களும் இதிலே இடம்பெற செய்யப்பட்டு இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி பெயர்ப்பாளர்கள் என்றே 6 பேரை நாம் எடுக்கிறோம். அவர்கள் சித்த மருத்துவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் இவர்களுக்கு உறுதுணையாக இருப்பதற்கு, சித்த மருத்துவர்கள் அதிலே பங்கு பெறுகிறார்கள். மொழிபெயர்ப்பாளர்கள் 6 பேர் அதிலே இடம் பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : போற்றுதலுக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவப் பிரிவுக்கு பொதுவாக அவ்வளவு வரவேற்பு இருப்பது இல்லை. ஆகவே, இந்த சித்த மருத்துவப் பிரிவில் சிகிச்சைப் பெறுவதற்காக, அந்தப் பிரிவானது மிகவும் கவர்ச்சியுள்ளதாக ஆக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எப்படி கவர்ச்சியுள்ளதாக ஆக்குவது என்பது எனக்குப் புரியவில்லை. இப்போது அலோபதியிலே எங்கெங்கே சரியாக குணம் அடையவில்லை என்று கருதுகிறார்களோ அவர்களெல்லாம் சித்த மருத்துவத்திற்குச் சென்று, அங்கே வெற்றிகரமாக, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு அந்த நோய் குணம் அடைந்து வருகிறார்கள். எனவே இப்படிப்பட்ட விளம்பரங்களின் மூலமாகவும், பொது மக்கள் நடைமுறையிலே சித்தமருத்துவத்தைப் பயன்படுத்துவார்களேயானால் அவர்களுக்குச் செலவும் குறைவாக இருக்கும். அதே

1993 ஏப்ரல் 29]

நேரத்திலே சிறப்பான வைத்தியம் கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைக் கவர்ச்சிகரமாகச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரே ஏதாவது ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அதைப் பற்றி நாம் ஆலோசிக்கலாம்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 524. டாக்டர் க. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

524—

நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ், இரத்த சேமிப்பு வங்கி வசதி.

* 15652—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ். இரத்த சேமிப்பு வங்கி போன்ற வசதிகள் இல்லாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகளைச் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசின் தற்போதைய திட்டப்படி 50 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனைகளுக்குத் தான் இந்த வசதிகள் படிப்படியாக கொடுக்கப்படுகின்றன. அதற்குப் பின்பு தான் நன்னிலம் உட்பட மற்ற மருத்துவமனைகளுக்கு இந்த வசதிகளைக் கொடுப்பதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் பெரும்பாலான விளை நிலங்கள் இருப்பதனால் அங்குள்ள சாலைகள் எல்லாம் மிகவும் நேராக இல்லாமல் கோணல் மாணலாக இருப்பதனால் அங்கு அதிகப்படியான விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இது போல விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்தில், அந்த நோயாளிகளைத் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கோ அல்லது அருகிலுள்ள நாகப்பட்டினம் பொது மருத்துவமனைக்கோ எடுத்துச் செல்லுகின்ற சூழ்நிலை உள்ளது. நன்னிலம் பகுதியில் உள்ள கிராமம் போன்ற பகுதி